# இலங்கை காப்புறுதிச் சபை

காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவோர்

IBSL
INSURANCE
BOARD OF SRI LANKA

## பொது மக்களுக்கான முக்கிய அறிவித்தல்

**பயன்விளைவுகளை அனுபவிப்பதன் பொருட்டு தொடர்ச்சியாக காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்**

ஆயுட்காப்புறுதிக் காப்பீட்டு உறுதிப்பத்திரங்கள் தொடர்பான காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்துதல் சம்பந்தமாக இலங்கை காப்புறுதிச் சபைக்கு (IBSL) பெருமளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

அதன் பிரகாரம், காப்புறுதிப் பத்திர உரிமையாளர்கள் மற்றும் காப்புறுதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள ஆற்றலுடையோர்கள் காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பின்வரும் ஏதேனும் ஓர் விருப்புத் தேர்வுப் பொறிமுறையொன்றை உங்களுடைய வசதிக்காகவும் உதவியாகவும் காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தும் பொருட்டுப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

காப்புறுதிக் கம்பனிகளுக்கு கொடுப்பனவுகளை நேரடியாக காசு, கோடிடப்பட்ட காசோலைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவு முறைகள் மூலம் (உதா : நிலையியற் கட்டளை, கடன் அட்டைகள் மூலம் செலுத்துதல்) காப்புறுதிக் கம்பனியின் பிராந்திய கிளை அலுவலகங்கள், காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள், தொடர்புடைய காப்புறுதி தரகர் கம்பனிகள், உங்களுடைய காப்பீட்டுப் பத்திரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள காப்புறுதி முகவர்கள், (காப்புறுதிக் கம்பனியினால் காப்பீட்டுத் தவணைப் பணம் காசாகச் சேகரிக்க அங்கீகாரமளிக்கப்பட்டிருப்பின்) அல்லது தொடர்புடைய காப்புறுதிக் கம்பனியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய ஏதேனும் வேறு நிறுவனங்கள் அதாவது வங்கிகள் அல்லது சிறப்புச் சந்தைத் தொகுதி கடைப் பிரிவுகள் ஆகியவற்றின் ஊடாக கொடுப்பனவுகளைக் காசாகச் செலுத்தலாம். வேறு கொடுப்பனவு வகைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு உங்களது காப்புறுதிக் கம்பனியுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

காப்பீட்டுக் கட்டணங்கள் காசாகத் தீர்வு செய்யப்படும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான கொடுப்பனவுகள் கையளிக்கப்பட்ட உடனேயே காப்புறுதிக் கம்பனியினால் அல்லது காப்புறுதி தரகர் கம்பனியினால் வழங்கப்படும் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றீர்கள்.

உங்களுடைய ஆயுட்காப்புறுதிக் காப்பீட்டுப் பத்திரம் செயல் வலுவுள்ளதாக இருப்பதன் பொருட்டு மற்றும் அதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பயன் விளைவுகளை அனுபவிப்பதன் பொருட்டு, உங்களுடைய காப்புறுதிக் காப்பீட்டு கட்டணங்களை தொடர்ச்சியாகவும் தாமதமின்றியும் செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.


**இலங்கை காப்புறுதிச் சபை**

11 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்,
எச்சிலன் சதுக்கம், கொழும்பு 01.
தொலைபேசி : 011 2396184–9, தொலைநகல் : 011 2396190
ஈ-மெயில் : info@ibsl.gov.lk வெப் தளம் : www.ibsl.gov.lk